Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி

SANMARKA POTHINI

பத்திரவிலைவிதம்
ஒன்றுக்கு ரூபா 2-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் 50
இந்தியாவுக்குசதம் 100
பிறதேசங்களுக்கு எடு

விளம்பரவிலைவிதம்
வரி ஒன்றுக்குசதம் 50
50 க்குமேல்ஒருவரிக்கு 2.0 க்குமேல்.....அ
இணைப்பிரகா மொல்லெ
ன்றிற்கும்—50 ஒன்ற

ஒன்றுவிட்டொரு புதன்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்

Published on every other Wednesday

VOL. XXXIV. JAFFNA SEPTEMBER 18th 1918. No. 19

நசம் புத்தகம். யாழ்ப்பாணம் கசுகஅம் ஹு புரட்டாசிமீ க்அஉ புதன்கிழமை. சங்கியை கசு

செகராசசேகர பிறமேகநிதானம்.

அழல்காறுகப்பிறமேக சலந்தான்தெறிக்கும்ஆண்கடுக்கும்
விழலாம்கடக்கஒட்டாது மிகவுந்தாகம்பசியுண்டாம்
கழமேயபரும்உடம்பெரியும் கனவுமிரவும்பகலுமுண்டாம்
குழலேயனையமொழிமாதே குறிபோர்க்குரையுங்குணந்தனையே. 11

அனையாய்சலமாய்பிறமேக சலந்தான்தாழையிதழ்நிறம்போல்
மனைநீரழியும்எரிவுண்டாம் மகாநிறமாமஞ்ஞணிக்கும்
புனைசேர்தந்தமுதிர்ந்துவிடும் போதப்பசிக்குமுடம்பினைக்கும்
தினைநீருண்டாம்நாற்றமதாம் செயவாணயனத்திருவனையாய் 12

கிருவேயபிளந்தப்பிறமேக சலந்தான்நீசாய்யுங்குணமுரைக்கில்
உருவாமாகக்துயரமிகும் ஒழுகுஞ்சலந்தானுதிரநிறம்
தருமேபுளித்தகாற்றமுடன் சரீரமினைக்கும்வெயர்வுண்டாம்
சுமமேசலுக்கென்றேயுடனே தொற்றஞ்சலமும்விழுக்கிடுமே. 13

விழுந்தசலந்தான்உதிரம்போல் வெள்ளுமதப்பேல்லேமதாம்
உழுந்துநிறமாய்ச்சாமபலகரைத் தமுநீர்ப்பாய்ச்சலதுந்தோற்றில்
எழுந்தகனகவரையிரண்டாம் இனைசேர்தனத்துளிமானே
கொழுந்துமனவிற்பிறந்தபித்த சலத்தின்குணத்தைப்புகல்வோமே. 14

புகலும்பித்தபிறமேகசலந்தான் பொருவுமானமேதம்
இகல்சேர்காற்றமிவைகாறும் எரியுமுடன்புதாகமதாம்
மிகவுங்கடிப்புமெரிப்புமுண்டாம் விழிநீர்பெருகும்வெளுப்புடனே
அகலும்பச்சைநிறங்காணும் அருந்துமருந்தின்குணமாமே. 15

சகல நொத்தாரிஸ்மாருக்கும் ஊரவர்களுக்கும் வசேஷ விளம்பரம்.

தொண்டமானறு செல்வச்சந்நிதி கோவிலில் காலஞ்சென்றபோன ஆறுமுகம் முத்துக்குமாருவுக்குரிய பாகமும் அவருக்குரிய மற்ற எல்லா ஆதனங்களுக் மேற்படி கோவிலின் அன்னதானமடத்துக்கு மிகச் சமீபமாக வடகிழக்கில் மேற்சொல்லிய முத்துக்குமாரு மகன் செல்லையாவுக்கும் அவரது மூன்று சகோதரிகளுக்கும் உரிய பொதுப்பொருள்கொண்டு 1917ம் வருஷம் சார்த்திகை மாதத்துக்குமுன் (அரசரது செல்லையாவுடைய விவாகத்துக்குமுன்) கட்டுவிக்கப்பட்டிருக்கும் (மேற்கில் இரண்டு அறைகளும் கிழக்கில் நான்கு நான்கு வாசல்களுமுள்ள) கல்வீடும் மேற்சொல்லிய செல்லையாவுக்கும் அவரது மூன்று சகோதரிகளுக்கும் பொதுவாயிருப்பதியால் அவற்றைக்குறித்துத் தனக்குமாத்திரம் சொந்தமென்று கடுஞ்சற்றி அறுதி முதலிய எவ்வித சாதனத்தையும் பதிப்பிப்பதற்கு மேற்சொல்லிய செல்லையாவுக்கு யாதும் உரித்தில்லையென்று இதனகீழ்க்கையொப்பம் வைத்திருக்கும் அவருடைய சகோதரி பாக்கியத்தின் புருஷன் ஆறுமுகம் வேதநாயகமுடையான் சகல நொத்தாரிஸ்மாருக்கும் ஊரவர்களுக்கும் இதனால் விளம்பரப்படுத்துகின்றேன் இதனால் செல்லையாவுடையதாயார் சிவந்தாயிருந்தபோது வாங்கப்பட்டு இப்போது செல்லையாவசம்பிற்கும் ஒருகோடி எருத்துமாகேளும் அவருக்கும் அவரது சகோதரிகளுக்கும் பொதுவான படியால் அவைகளை விற்பதற்கு உரித்தில்லையென்பதையுங் தெரிவிக்கின்றேன்.

மேற்சொல்லிய செல்லையாவென்பவர் தனது தாயார் கடினசோபாற்பீடிக்கப்பட்டு அறிவுமயக்கமுற்றிருந்த அந்தியகாலத்தில் அவபோரிலிருந்த (அவரது காலஞ்சென்ற சகோதரியும் எனது முதற்றாரமாகிய சந்தனப்பிள்ளைக்கு வாக்குப்பண்ணப்பட்டு அவருடைய பிள்ளைக்குரியனவாயிருந்த) ஆதனங்களெல்லாம் தான்குவாலாலம்பூரசென்றிற் உத்தியோகமாயிருந்தபோது இரவிய வஞ்சனையால் தன்பேருக்கு எழுதுவித்துக் கொண்டமையாலும் இன்னும் மற்ற ஆதனங்களையும் அபகரிக்க விரும்புவராய்க் காணப்படுகையாலும் இவ்விளம்பரத்தைக் தான் வெளியிடவேண்டியதவசியமாயிற்று.

இங்ஙனம்,
தொண்டமானறு 21—8—18 } சி. ஆ. வேதநாயகம்.

கையொப்பவரவு.

D.W. Appucutty Esq. Bentong 10—00
K. Alxander Esq. Head Teacher Muttagalla 1—25

யாழ்ப்பாணம்.

வார்ச்சி—புரட்டாசிமாதம்பிறந்தும் விரையாமழைபெய்யவில்லை. சிலஇடங்களில் ஓர் சிறுமழைபெய்து கொறுமழையாய்ப் புழுதியிருக்கிறார். அக்கொடையின் ஓர்பாகம் (

நியில்விரைத்ததாளிடத்தையும்பழுதுபடுத்திவிட்டது. காலநிலைமாற்றத்தால்கடுமள் காய்ச்சல் இன்னுமுளன்சாளன்னும் [illegible]

பஞ்சம்.

கம்மூரில் முன்னோர்போதுமில்லாவாறு ஊனுடையாகிய பொருட்களெல்லாம் விலையேறிவிட்டன. வெள்ளை வஸ்திரங்கள் யார் ஒன்றேகால் ரூபாய்க்கு மேலாயும் விலைப்படுகிறது. சாதாரணசித்தை யார் 80 சதம். அரிசி ஒருகொத்து 25 சதமுதல் 30 சதம்வரைகும் விலையேறிவிட்டது. இது ஒருவாறு மடுப்பெடுமென்கிறார்கள். இந்தியாவிலும் இக்கஷ்டம் அதிகமாயிருப்பதால் சனங்கள் கொள்ளையிடவுந் தலைப்பட்டுக்கொண்டார்கள். கம்மூர்பெரும்பாலும் இந்தியரவை எதிர்நோக்கியிருக்குந்தேசமாதலால் காத்திருக்கிறபடி யுத்தம்விரைவிலமுடியாவிடின் விலை இறங்குமென நிச்சயமாய்ச்சொல்லமுடியாது. சமீபத்தில்பல அரிசிமூட்டைகள்கொழும்புக்குவருகிறது. அதனால்சற்றேஆறுதல்.வியாபாரிகள் இத்தகுணமே அதிகலாபம்பெறுகிறார்கள். கப்பல்காடிக்காரருமப்படியே. இதை அரசினர் கவனித்தக கூடியவரையில் விலைகுறைத்துவிற்கும் வழிவகைகளைத் தேடுவாரென நம்புகறோம்.

சினிக்கொம்பனி—சினிக்கொம்பனி முழுகிநுபோயிற்று. இதை வேறுபேர் குறைந்தலிலிக் குவாங்கி கடத்த முயற்சிக்கனார்களாம்.

சுன். வை. மிக்கேல்விறதரின் தேகவியோகம்—கொழும்புத்துறை அகாதசாலையில் நைத்தொழிற்பகுதியை நன்னிலைக்குக் கொண்டுவந்தவரான இவர் அதிவிருத்தாப்பியராயிருந்து சென்ற 11உ தேகவியோகமாஞரெனமுகேட்டு கறம் கம் பழையநண்பரிலொருவரையிழந்ததினால் அதிவிய சனமடைக்தோம்.

நெற்குத்தும் யந்திரம்—இளவாலையில் மெஸ். ச. அகுளதீசப்பிள்ளை நூர்நெற்குத்தும் யந்திரம் அமைப்பித்திருக்கிறார். அதில ஓராளில் 25 பறைநெல் குத்தக்கூடுமாம்.

வஸ்திரக்கொடை—மெஸ், T. காரனபிள்ளை பதினாயிரம்ரூபா பெறுமதியான வஸ்திரங்களை வறிஞர் வயோதிபர் அங்கவீனரானவர்களுக்கு கொடுக்க ஒழுங்குசெய்துநூர்வங்களாவில் கம்எசன்தரால் காளை [illegible]க்குக் கொடுக்கப்படும்.

இறுவில் வைத்தியசாலை—இவ்வைத்தியசாலையின் சென்றவருட வேலையைப்பற்றிய அறிக்கைப்பத்திரம் வெளிவந்திருக்கின்றது. அதன்படி இந்தக் கஷ்டகாலத்திலும் வைத்தியசாலை விசேஷமான வேலைகளைச்செய்து அனுகூலமடைந்திருக்கிறதாக அறிகின்றோம். அதைப்பற்றிய விபரமாவது;—

மருந்துச்சாலையைத் நாடிவந்த நோயாளர் தொகை	4018
வைத்தியசாலையிற் பரிகரிப்புப் பெற்றோர்தொகை	2019
வைத்தியசாலைப்பிரசவம்	532
ஊருக்குட் பிரசவவைத்தியம்	38
கிராமதரிசனை	343
வைத்தியாலோசனை	76
சத்திரவைத்தியம்	250
வைத்தியசாலைகளிற் பரிகரிப்புப்பெற்றவர்களின் நாளாந்தசராசரி	74

இந்த வைத்தியசாலைக்கு அவசியமான சிறந்தவைகளிருப்பதாக அறிக்கைப்பத்திரமுன்றது. அவசியத்தின்பேரில் சொற்காலத்துக்கு மாத்திரம் [illegible] ஆதாயமைக்கப்பட்ட பொங்கட்டிடங்களுக்குப்பதிலாய் நிலையான கட்டிடங்கள் அமைக்கவேண்டியதே காணப்பட்டிருக்கும் பெருந்தொகையாம். அதற்காக 16500 ரூபாய் தேவையென்பது மதிப்பு.

தோய்நீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்சன்) காரணம். தூர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் வாங்கத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணம் கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிழையாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறக்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை எழும்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண் பார்வையின் மந்தம், தலைசுற்று, கில்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், கிரிவாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்த்ரீரோகமெனறு தப்பாகஎண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்ள வதற்குஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.



ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. ... 10 8 0

இவை, மேலை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், செலனியில் ஏஜண்ட் ஆக டைக்கும். மகா

இதில் அரைவாசியை அரசாட்சியர்கொடுக்க உடன்பட்டிருக்கிறார்கள் மிகுதிப்பணம் பொருமதாகிய புண்ணியலோசனிகிழமுவருடத்துட் கொடுக்கப்படுமென வைத்தியசாலையார் காத்திருக்கிறார்கள்.

சத்திரவைத்தியத்துக்கும் புதிதாய் ஓர் கட்டிடந்தேவை. அதற்குரிய செலவுக்கு மதிப்பு 15000 ரூபாய்.

இப்போது இவ்வைத்தியசாலையில் 2½ கேஷமார் சிலையாயிருக்கு நிச்சை கடப்பித்துவருகிறார்கள். அவர்கள் வசதியாய்த் தங்குதற்கும் வீடு அவசியந்தேவை. அதற்குரிய செலவுக்கு மதிப்பு 12000 ரூபாய். இவைகளும் நற்நேசத் தருமசிலரின் கடமையை நினைப்பூட்டுவனவேயாம்.

உ—கை.

வஸ்திரக்கொடை—சென்ற 7உ யாழ்ப்பாண வியாபார சமுதாயத்தவரால் ஏழை சூான வயோதிபர் குருடர் செவிடர் அங்கவீனர்களுக்கு வஸ்திரதானஞ் செய்யப்பட்டது. பெருந்தொகையான சனங்கள் உதவிபெற்றனர்.

இலங்கை.

கம் தேசாதிபதி—இலங்கைக்குத் தேசாதிபதியாய் நியமிக்கப்பட்ட சேர். உவில்லியம் கென்றி மான்னிங் K. C. M. G. K. B. E. C. B. அவர்கள் சென்ற 11உ புதன்கிழமை காலை 9 மணிபோல இலங்கைக்கரையையடைந்தனர். துறைமுகத்திலே அவரை வரவேற்றுபசரித்தற்கு நீதிபதிகள் சட்டநிருபணசபை அங்கத்தவர்கள் இராணுவப்பகுதிக் தலைவர்களாதியர் துறைப்பாலத்தின் கீழ்ப்பகுதியிலும் மற்றைய விசேஷ உத்தியோகஸ்தர்கள் கொழும்பு நகரசக்க அங்கத்தவர்கள் மேற்காட்டுப்பயிர்ச்செய்கைச் சங்கத்தவர்கள் வியாபாரசங்கத்தவர்கள் தோட்டத்துரைமார் சங்கத்தவர்கள் துறைமுகப்பகுதிக் தலைவராயிர் துறைமுகப்பகுதின் மேற்குப் பகுதியிலுமாய் நின்றனர். தேசாதிபதியவர்கள் அவர்களது உபசாரனை பெற்றபின்னர் இராணிமாளிகைக்குச்சென்று சத்தியஞ்செய்து இலங்கை ஆளுகைப்பொறுப்பைக் கையேற்றனர். அவர் பவனி போனவீதிகளெல்லாம் மட்டாயலங்கரிக்கப்பட்டிருந்தன. அன்றுகண்ட காட்சியினாற் தேசாதிபதியவர்கள் மிக மகழ்ச்சியடைந்தனராம்.

கினேறிக்கல் பரிட்சை—இப்பரிட்சையமர்ந்தழிமாதம் 17உ தொடக்கம் சிலவாட்களுக்கு நடக்கும். ஐப்பசி மாதம் 17உ க்குள் விண்ணப்பங்கள் கையேற்கப்படும். பரிட்சை யொழுங்குகள் விண்ணப்பமாதிரிப் பத்திரங்கள் தபாற்கந்தோரில் வாங்கலாம். இம்முறை 20 பேர்மாத்திரம் தெரிந்துகொள்ளப்படுவோர்கள். ஆட்களோ இருநூறு முன்னூறுபேர் செல்வார்கள். இந்தயுத்தகாலத்தில் அரசுக்கும் வருமானமாயிருக்கட்டும்.

கேம்பிறிட்கச் சர்வகலாசாலைப் பரிட்சை—இவ்வருடத்திலே கேம்பிறிட்கச் சர்வகலாசாலைச் சீனியர்வகுப்புக்கு இலங்கையிலிருந்துசென்ற ஆண்பிள்ளைகள் 429 பேர். அவர்களில் 217 பேர் அனுகூலமடைந்தனர். பெண்கள் 26 பேர். அனுகூலமடைந்தோர் 15 பேர். யூனியரவகுப்பில் தோற்றிய ஆண்பிள்ளைகள் 615 பேர். அவர்களில் 329 பேர் அனுகூலமடைந்தனர். பெண்கள் 90 பேர். அனுகூலமடைந்தோர் 40 பேர்.

மகா மேன்மைதங்கிய
என்றி பூலஞண்டலரின் வெள்ளியுபிலி.

ஒன்றேமீ 28உ சண்டிக்ளியைச்சேர்ந்த ஈ ச்சமோட்டைத்தெருவிலிருக்கும் நீ. மோம்பிள்ளையும் குடும்பமும் அவர் குமாரர்களும் இன்னாளுகடித் தங்கள் வீட்டிலிருந்து மேனாள வாத்தியங்களுடனும் வெடிசெறிந்து முதலிய வேலாவலத்துடனும் மேற்றிராணியார்மனைசென்று அவரைத் தரிசனைசெய்து பொன் வெள்ளிகளும் பட்டுக்குடையும் இலங்கை பம்பயாநிய இடங்களிலிருந்து வருவித்த தானை சித்திரக்[illegible]கருகு செட்டிணையவைத்துப் பணிக்தனர். தற்போது கொழும்பிலே இஞ்சினியர்க்கர்தோரில் உத்தியோகம்வகித்திருக்கும் மேற்படி மோம்பிள்ளையுடைய தலைமகன் ஆசிர்வாதம் [illegible]பவர் ஆண்டவருக்கு இங்கிலிஷில் சோபனபத்திரம் வாசித்தனர். பின்பு அவருடைய ரிபிதகப்பன் நீ. அந்திரேயப்பிள்ளையும் அவருடைய மாமன் எஸ். சுவாம்பிள்ளையும் தகப்பனார் நீ. மோம்பிள்ளையும் மேற்றிராணியாண்டவருக்கு மாலையிட்டனர். மேற்றிராணியாண்டவர் வள்ளல்கள்ரிஷியும் மனப்பூரிப்புமுடையவராய்ச் மோம்பிள்ளைக்கும் பிள்ளைகளுக்கும் மற்றையோருக்கும் தக்க பதிலளித்து ஆயவசனங்களும் ஈன்மதியுங்கூறிப் பல மேற்றிராணி மார்சமூகத்தில் மோம்பிள்ளைக்கும் அவர் குமாரருக்கும் ஆசீர்வாதமளித்துத் தமது பிரதிமைப்படமொன்று கையளித்து ஆசீர்வதியும்ப்பினர். (ஈடி.)

இந்தியா.

பனைவிற்றதற்கு அபராதம்—தங்கப் பவுன் ஒன்று 15 ரூபாய்க்குமேல் விலைகொடுத்துவாங்கிய ஒருவருக்கும் அதைவிற்ற நிருபருக்கும் பம்பாயில் 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்திய கொள்ளை—எல்லூரில் சென்ற 1உ மத்தியளவில் 100 பேர்வரைவிர் நிரண்டு அதிகாரிகளிடம்போய் பொருட்களை அதிகவிலைவற்றிவியாபாரிகள்விற்பதாய்த்தெரிவித்த அவர்கள் பொவிருடன் விலையைத் தணிக்கும்படி கேட்கப்போவினர், அவர்களைக்கண்டதேவியாபாரிகள் கடையை மூடிவிட்டனர். உடனே பதினாயிரஞ்சனங்களுங்கூடிக் கொள்ளிட ஆயுதஞ்செய்ப்பொலிசர்தாக்கிவிட்டனர்.

புதுச்சேரியில் சனங்கள் செல்லுமண்டியட்டுகுந்து கொள்ளிவிட்டனர். பொலிசர் அதைத்தடுத்துவிட்டனர். தொழிலாளிகளின் கட்டாயத்தின்பேரில் அக்கே விலகுறைக்கப்பட்டது.

மதுரையிற் கொள்ளை—சென்ற 2உ மதுரையில் தானியவியாபாரிகள் முதல்நாளிலும் அன்று விலையேறியிற்றாகவென்று பலசனங்கள் நிரண்டு ஒருதெருவில் கொள்ளையாடினர். பொலிசர்தலைவரும் டிவிசன் நீதிபதியும் அங்குசென்றனர். பின்புபோட்டாரில் கலெக்ற்றர் வர்லோன் தானியாருக்குப்போலையில் கூட்டம் மிகுந்து வண்டியைச் செல்லவிடாமல் அனேகர் வழிபிற்படுத்துக்கொண்டார்கள். வெல்ற்றரு வண்டியைநிறுத்திக் காரணத்தை விசாரித்தார். வி[illegible] எம்மால் நாம் முடியவில்லை யென்று முறையிட்டனர். நலெக்றர் உங்களிற்சிலரைத் தெரிவுசெய்து என்னிடம்அனுப்பினால் குறைமுறையை விசாரித்துஎன்னாலியன்றதைச் செய்வேன்என்றார். சிலர் இப்போதே நிர்மானிக்கவேண்டு மென்றார்கள். ஆரோ எங்கோஎறிந்தகல்லொன்று கலெக்றரின் மூக்கிற்பட்டு இரத்தம் ஒழுகியது. யாரும் பரிதாபித்தனர். ஆயுதபாணிகளான பொலிசாவரக் கூட்டம் குலைந்தது.

3உ சேலத்தில் ஒவ்வொருசெல்வாய்க் கிழமையும் சர்தைகடும் செல்வாய்ப் பேட்டையில் சென்ற 2உ சனங்கள் கொள்ளைகொள்ள வென்று கூக்குரலிட்டு ஓடிப்போகக் கடைகளெல்லாம் மூடப்பட்டன. பொலிசாரும்அதிகாரிகளும்வந்துகலகத்தையமர்த்தினர்.

விழுப்புரத்தையடுத்த பஞ்சாமாதேவியில் 29உ வழக்கிம்போற்சர்தைகூடியபோது பல 12 மணிவரையில் சனங்கள் கொள்ளையிட ஆரம்பித்த அகப்பட்ட தனிமனிதனை அடிகாரித்துக் கொண்டு பேரம்விட்டார்கள் பொலிசர்வந்து 85 பேரைப்பிடித்தனர். திருடப்பட்டபொருட்கள் பெரும்பாலும் அகப்பட்டிருக்கின்றன. வழக்கு நடக்கிறது.

திருப்பத்தூரில் 4உ இரண்டுமூன்றுபேர் கொள்ளைகொள்ளவென்றகூவி பழங்கள் காய்கறிகள் சட்டியானைகள் சேதஞ்செய்து ஒருமணிநேரம் சனத்தைச் சாட்டையுமறுத்துக்கலகஞ்செய்தனரா. அன்றுசேலத்திலும் கொள்ளைகடந்து அதிகாரிகள் அடக்கி ஒழுங்குசெய்துவிட்டனர்.

ஈரேட்டில் 5உ சில எட்டாமுட்டிகள் சேர்ந்து தனிமனிதனிடம் பறித்தும் கிழித்தும் விட்டார்கள். முன்பெப்பல்சபாராயவர்வந்து வியாபாரிகளின் நிலையைவினவினர்.

ஆர்காட்டிலும் 10உ மாலை 5 மணிவரையில் கலகக்காரர் கொள்ளையிடவந்தும் கடைக்காரர் கடைகளைமூடிவிட்டதால் பலமாக கடைகளிலிருந்து பலவாறாகவிர காசப்பறித்தினர். பொலிசர்வந்து 8 மணிவரையில்கலகத்தையடக்கினர்.

காஞ்சிபுரத்திலும் அந்தநாள் 5000 பேர்கிரண்டு கொள்ளையிடமுயன்றார்கள் சில அரிசிமூட்டைகளை இழுத்தெறிந்து காய்கறிகளையுமள்ளியனைவர்களைச் சேதப்பிடித்தவே பொலிசரும் வந்து கலகத்தையடக்கினர். ஒரு பொலிஸ் இன்னஸ்பெற்றரும் ஒருபொலிஸ்மகாயப்பட்டனர். ஈற்றிற்பொலிசர் ஆயுதமெடுப்பதாய்ச் சொல்லவே கூட்டம் கலைந்துவிட்டது.

காஞ்சிபுரத்தில் 10உ பிற்பகல்புகைரதவரேசனுப்புகுந்து 500 அரிசிமூட்டைகளைக்கொள்ளையாடிக் கண்ணுடிகளன்னல்களை உடைத்துக் கல்லாலுமெறிந்தனர். 11உ நிகழ்ந்து 500 பேர் நெல்லிஸ் ரேசனுட்களத்தனிக்கக் கூட்டமெலியும்படி மேலுக்கேச்சட்டும் பலியாமல் ஏற்றில் கூட்டத்தாருகு பட்டாளத்தார்கட்டளை, மூன்றுவாலியர் சுடப்பட்டிருக்கினர்.

சென்னையில் 10உ சாயங்காலம் 3 மணிவரையில் கொள்ளைகொள்ளையென்ற கூச்சலுண்டாவே கடைக்காரர் கடைகளைப்பூட்டிவிட்டனர். குழைந்தவாடைப்பக்கத்தில் சிலர் தண்டங்களை எடுத்துப் பயமுறுத்தி அரிசிமுதலியவைகளைக் கொள்ளையடினர். பறைச்சேரி திருவல்லிக்கேணி முதலியஇடங்களிலும் கொள்ளையடினர். சூரமார்க் கட்டிலிற்புகுந்து கோதுமைமுதலியவைகளையும் குறையடினர். சாமான்களை உடைத்து கடைகாரருக்கு அடித்துமா தாரிநருகுஞ்செய்தார்கள் பொலிசர் வருமுதலே முன்பின் 100 பேர்வரையில் ஒடிவிட 10 பேர்மாத்திரம் பிடிக்கப்பட்டார்கள் பின்பு பட்டாளத்தாரைக் காவலுக்குவைக்கப்பட்டது. அந்கேதிரண்டுமூன்றுநாட்களாகவாக்கர்களு கொள்ளைநடந்தாம். மூர்மார்க்கட்டில் அந்திக்கடையும் பஸ்மீகரமாயிற்றும் நட்டம் 5000 ரூபாய்க்கிருக்குமாம்.

கல்கத்தாவில்கலகம்—ஸ்லாம்மார்க்கத்துக்குரூபரேத்தியை வருவிக்கக்கூடிய ஒருசங்கிலியை "இந்தியன்டெலிகிறாபிஸ்" பத்திரிகை எழுதியதால் 9உ கலகத்தாவில் முஸ்லீம்கள் ஓர் கூட்டங்கூடிப்பேச இருந்தார்கள். இதைஇந்தியஅரசு தடுத்துவிட்டது. என்றாலும் குறித்தஇடத்திற்கு மகமியர் பலர்வந்து கூடினர். அதைத் தடுக்கப் பொலிசர்முயன்றும் கூடவில்லை. கூட்டத்தார்கட்டுக்கடங்காமல் கொள்ளையாடமுயன்றனர். நடுத்த பொலிசர்மீதுங் கல்லெறிந்தனர். பட்டாளங்கள் அழைக்கப்பட்டன. கவசம்பூண்ட மொட்டார்வண்டியுமொன்று அழைக்கப்பட்டது. மாக்கிம் பீரங்கியொன்றை அழைப்பித்துக் கலகக்காரருக்குத்தெரியும்படியான இடத்தில் ஸ்காபித்தனர். அதனால்சற்றே அமைதிகண்டாயிற்று. ஒர் பொலிசதிகாரியும் பொலிசும் காயப்பட்டனர். கலகக்காரரைச்சேரவந்தவர்களைப் பொலிசர்தடுத்தலில் கலகக்காரர் மிஞ்சவே பட்டாளத்தார் துப்பாக்கி பிரயோகஞ்செய்யத் தலைப்பட்டனர். அதனாற் பலர்கொல்லப்பட்டனர். பொலிஸ் கமிஷனர் கணுக்கால் குத்துண்டார். 20 பொலிசரும் ஒருசார்சண்டும் வாருனகாயப்பட்டார். இருமார் வரரின் அடித்துக்கொல்லப்பட்டனர். மமதியாரிலும் 25 பேர்காயப்பட்டனர். இதுவரை 400 பேர் பிடிபட்டிருக்கின்றனர். 11உ நடந்தகலகத்திலும் 7 பேர்காயப்பட்டனர். 21 கடைகள்கொள்ளையிடப்பட்டன.

சென்னையைச்சேர்ந்த அமிஞ்சிக்கரையிலும்14 மூட்டைஅரிசி சென்னையிடப்பட்டது.

டாக்டர் வரதராஜுலு நாயுடு குற்றம் சாற்றப்பெற்றார்—சில தினங்களுக்குமுன் ஸ்ரான் டாக்டர் வரதராசலு நாயுடு மதுரையில் உபந்நியாசஞ்செய்து திரும்பினார். அவர்செய்த உபந்நியாசத்தில் கவர்ன்மெண்டுக்கு விரோதமான வார்த்தைகள் கிலஉள்ளனவென்று அவர்பேரில் ஸ்ரான் பிறக்லாயிற்று. விவரம் அவர்காதில் விழுந்து கேரில்போய் வெளிப்படுவது உத்தமமென்றெண்ணி மதுரைக்குச்செல்லும் வழியில் திருச்சுராத்திற்பிடிபட்டு மதுரைக்குக் கொண்டுபோகப்பட்டார். டிவிஜனலமாஜிஸ்ரேர் முன்விடப்பட்டுப்பிணையின்பேரில் விடப்பட்டார். வழக்கு நடைபெற்றுவருகிறது.

யுத்த தந்தி.

Summarised
From the Madras "Hindu Nesan"
and "Swadesamitran"

பிரான்சு பெல்சிய யுத்தம்.

2உ சோர்ந்திப் பகுதியில் பிரங்கிச்சண்டை வெகுபலமாய் நடைபெற்றது. க்ரிசி அம்மாண்ட் என்றஇடத்தை நமதுபடைகள் கைப்பற்றிக்கொண்டன. பலலில் நமதுவிமானிகள் சத்துருவுமங்களிற்சென்று 23 டன் வெடிக்குண்டுகளைப்போட்டார்கள் என்று பிரான்சிய அறிக்கை கூறுகின்றது.

3உ லெஸலை என்றஇடத்துக்கருகில் நமதுபடைகள் நோர்ட் கால்லாயைக்கடந்து முன்னேறி 72உ இலக்கங்குன்றில் ஒருபகுதியைக் கைப்பற்றிக்கொண்டன. சத்துருக்கள் வெகுபலமாய் எதிர்த்தார்கள்ஆனாலுங் க்ரிஷ்ஆம்மாண்ட் ஒர்வ்ரி லியல முதலியஇடங்கள் நமதுவசமாய்விட்டன. சத்துரு அணிவரிசைக்குப் பின்னுள்ள தலைவங்கள் நமது பீரங்கிப்படைகளால் வெகுபலமாய்த் தாக்கப்பட்டன.

2உ பிரோன் என்றநகரத்தை ஆஸ்திரேலிய சேனைகள் பிடித்துக்கொண்டன. மாண்ட் செயிண்ட் க்ஸிண்டின் என்றஇடத்தில் எதிர்த்துத்தாக்கிய சத்துருக்களைத் திருப்பிவந்துவிட்டு இன்னுர்கள். பிரோனுக்கு வடக்கிலும் மேற்றிலும் பலலைகளைக் கைப்பற்றிக்கொண்டோம். பிரோன் ப்ராமிசோர்ட் செயிண்டெனிஸ் ஆகியவுமங்கள் நமதுவசத்திலிருக்கின்றன. கோம்ப்லாந் என்றஇடத்திற்குத்தென்கிழக்கில் ரான்சோர்ட் வெனவோ ஆகிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டோம். நிரந்பகுதியில் 2000 கிறையாளர்களையும் பிலிரங்கியையுஞ் சத்துருக்களிடமிருந்து பிடித்தோம் என்று சேர் டக்ளஸ் அறுப்பிய அறிக்கை கூறுகிறது.

அராசுக்கும் காம்பிரேய்க்கும் இடையேயுள்ள தெருவின் தெற்குப்பாகத்தில் நமதுசேனைகள் ப லஇடங்களில் சத்துருக்களைச் செயமுறத்தாக்கினார்கள். கோர்வால் என்றஇடத்தில் சத்துருக்களவசத்திலிருந்த மேட்டுப்பாகங்களை ஆராதித்தைக் கைப்பற்றிக்கொண்டோம். சத்துருக்கள் ரான்சோர்ட் ப்ரெசிசோர்ட் டிவிலிசோர்ட் பாடிகோர்ட்முதலிய பலகோரமங்களையும் ஏராளமான கைதாளவரையையும் பிடித்திருக்கிறோம். இந்த இடங்களில் எதிர்த்துத்தாக்கிய சத்துருப்படைகளை நமதுசேனைகள் திருப்பியடித்து விட்டன. லென்ஸ் என்றநகரத்திலும் லிஸ்லிக்கரையிலும் கடக்க ஆயுனாரதத்தில் 67318 பேரைச் சத்துருக்களிடமிருந்து கைப்பிடித்திருக்கிறோம். இவர்களில் 1283 பேர் உத்தியோகஸ்தர்கள். 57 பீரங்கிகளும் 750 மெஷின்பீரங்கிகளும் சத்துருக்களிடமிருந்து கைப்பற்றினோம். சத்துருக்கோட்டையிலிருந்தொட்டாலும் ஏராளமான வெடிமருந்துச்சாமான்களும் இதரசாமான்களும் கைப்பற்றிக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சர் டக்ளஸின் அறிக்கை கூறுகிறது.

பெல்சியத்தின் எல்லைக்கரையோரத்திலுள்ள கெம்மல்குன்றை நேற்றுப் பிரித்தானியசேனைகள் பிடித்துவிட்டார்கள். செயின் குயிண்டின்குன்றும் கைப்பற்றிக்கொள்ளப்பட்டுப்போயிற்று. இதனால் பிரோன்நகரமானது பிரித்தானிய படைகளால் சூழ்ந்துகொள்ளப்பட்டிருக்கின்றது.

நோயன் என்ற இடத்துக்வடக்கில் செயின் மென் என்றகுன்றைப் பிரான்சியசேனைகள் கைப்பற்றிக்கொண்டன. நோயன் கொடி ஆயிடுக்கில் வெகு கோரமானசண்டை நடைபெற்றது. எயிலட்நதிப்பகுதியில் சாய்சன்கூற்குகிழக்கில் பிரான்சியபடைகளின் முன்னேற்றத்தைத்தடுக்கச் சத்துருக்கள் பெருமுயற்சி செய்தார்கள் அவருடைய படைகள் பின்னுபின்னப்பிடித்தப்படுப்போயின என்று பரீசிலிருந்துவந்த தந்திகூறுகிறது.

2உ சென்ற ஆடிமீ 13உ யிலிருந்து இதுவரையில் பிரான்சியசேனைகள் 400 பீரங்கிகளையும் 75000 கிறையாளர்களையுஞ் சத்துருக்களிடமிருந்து பிடித்திருப்பதாக உத்தியோக முறையில் வெளியான பிரான்சியஅறிக்கை கூறுகிறது.

3உ ஸ்கார்பே நதிக்குத்தெற்கில் சென்ற திங்கட்கிழமை நமதுசேனைகள்செயம்பெறச்சண்டையைதடுத்தி ட்ரோரோர்ட் என்றஇடத்திலிருந்து ஸ்வெண்ட் என்ற இடம்வரையிலுள்ள பலமான அரண்வரிசைகளைச் சத்துருக்களிடமிருந்து கைப்பற்றிக்கொண்டன. செர்மெனியர் அங்கிருந்து பின்னடைய ஆரம்பித்து விட்டார்கள். சத்துருப்படைகளுக்கு காங்கள் மிகுந்த யிச்சேதம் விளைவித்துவிட்டதுடன் 10 ஆயிரம்பெயர்களைச் சிறைபிடித்துக்கொண்டோம். நமதுசேனைகள் இன்னும் முன்னேறிச்சென்று ப்ரோன்வில் டாயங் ஸில, பர்டின் கோர்ட் ஆகியஇடங்களைக் கைப்பற்றிக்கொண்டன. ட்ரோரோர்ட்டுக்கும் க்வெண்டுக்கும் இடையேயுள்ள பாகத்தில் கனடாசேனைகள் சத்துருக்களைத் தாக்கும்போது காட்டிய சாமர்த்தியம் ஒப்பற்ற விதமானதா யிருந்தது செர்மனியரின் பலமோ வெகு அதிகமாயிருந்தது. அப்படியிருந்தும் நமதுபடைகள் முன்னேறிவிட்டன. கவசந்தரித்த பிரித்தானிய மோட்டார்வண்டிப்படைகள் காலாட்படைச்சேனைகளுக்கு மிகுந்த உதவியாயிருந்தன என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

இன்றிரவு ஸர் டக்ளஸ் ஹெயிக் அனுப்பிய அறிக்கை கூறுகின்றது—நேற்றைய தினம் சத்துருக்களைப் பலமாக முறியடித்தபிற்பாடு நமது படைகள் பிரோனுக்கும் ஸெண்லி என்ற நதிக்கரைக்குமிடையில் முன்னேறிச்சென்றன. ஏப்பிரலிலிருந்து காம்பிரேய் ருமான்கோர்ட் ஆகிய இடங்களின்வழியே டெய்ஸுப்ஸ் என்ற இடம்வரையில் தற்போது அணிவரிசையானது ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. பின்னடையும் சத்துருக்களுக்கு நமது பீரங்கிப்படைகள் கனத்த சேதம்விளைவித்தன. சத்துருக்கள் ஏராளமான தனவாடங்களைக் கைவிட்டுவிட்டுப்போனார்கள். [illegible] லெஸினட்வால்ட் ஆகியஇடங்களை பிரித்தானியசேனைகள் கைப்பற்றிக் கொண்டன. எல்டேர்ஸ் என்றஇடம் நமதுவசமாய் விட்டது. அங்கு அனேக கிறையாளர்களையும் பல பீரங்கிகளையும் கைப்பற்றிக்கொண்டோம்.

2உ சென்ற ஆடிமாதம் 15உ தேதியிலிருந்து அவணிமீ 30உ வரையில் ஐக்கிய சேனைகள் 1,28,800 கிறையாளர்களையும் 2674 ஆயுதங்களையும் 2069 பீரங்கிகளையும் 13,783 மெஷின் பீரங்கிகளையும் சத்துருக்களிடமிருந்து பிடித்திருக்கின்றன.

ஏய்சன்நதிக்கு வடபாகத்தில் சத்துருக்கள்வெகு பலமாய் எதிர்நின்று போராடினார்களெனினும் காங்கள் முன்னேறிச்சென்று டெர்னி சாரின் என்ற மேட்டுப்பாங்கான ஸ்தலத்தைக் கைப்பற்றிக்கொண்டோம். சென்ற முதல்தேதியன்று 2 பீரங்கிகளையும் 78 மெஷின் பீரங்கிகளையும் 572 கிறையாளர்களையும் சத்துருக்களிடமிருந்து கைப்பற்றிக்கொண்டோமென்று அமரிக்க அறிக்கை கூறுகின்றது.

4உ எப்ஸுல் கோர்ட் என்றஇடத்திற்கு அருகில் நமதுபடைகள் சோம்நியைக் கடந்துவிட்டன. இந்த இடத்திற்குத்தெற்கில் கெல்வரி என்றஇடத்தில் நமது படைகள் பிரவேசித்து சத்துருக்களில் 200 பேர்களைச் சிறைபிடித்தன.

நேற்றையதினம் ஏய்சன் நதிக்கும் எல்லட்நதிக்கு மிடையுள்ளபாகத்தில் 1200 பேர்களைச் சிறைபிடித்தன.

செவில்லி என்ற இடத்திற்கு வடகிழக்கிலுள்ள பாய்ஸடீ சாபிட்சே என்ற இடத்தைக் கைப்பற்றிக்கொண்டோம். இந்தப்பகுதியில் 1500 பேர்களைச் சத்துருக்களிடமிருந்து கிறைபிடித்திருக்கின்றோம் என்று பிரான்சிய அறிக்கை கூறுகின்றது.

இன்றிரவு ஸர் டக்ளாஸ் ஹெயிக் வெளியிட்ட அறிக்கை கூறுகின்றது—மாயிலின்ஸ் என்ற இடத்திற்குவடக்கில் பிரித்தானியசேனைகள் டாடிடில் நதியையும் டோர்ட் கால்வாயையும் தாண்டி முன்னேறியிருக்கின்றன. சத்துருக்கள் நமது படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கப் பெருமுயற்சிசெய்தும் பயன்பெறவில்லை வடக்கில் பிரித்தானியபடைகள் ரயாலகோர்ட்என்றஇடத்தைக் கைப்பற்றிக்கொண்ட ஹாவ்லினகோர்ட் என்ற இடம்வரையில் முன்னேறியிருக்கின்றன. டெமிரோர்ட் போவர்ஸ் ஆகிய இடங்களுக்கெதிரில் பிரித்தானியபடைகள் சத்துருக்கள் தாக்கியதைத் திருப்பியடித்துவிட்டு டோர்ட் கால்வாயின்மேல் கரையைக் கைப்பற்றிக்கொண்டன.

லென்ஸ் நகரம் பிடிக்கப்பட்டுப்போனதாய் வெளியிட்டசெய்தி இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. அந்நகரத்தின் மேற்குப்பாகத்திலும் தென்மேற்குப் பாகத்திலும் பிரித்தானியசேனைகள் பிரவேசித்துவிட்டதாய்க் காண்கின்றது. எனினும் சத்துருக்கள் விஷக்காற்றையுண்பெண்ணும் குண்டுகளோப் பிரயோகிப்பதாலுங் முன்னேறும் சேனைகள் விளைத்துக்கொள்ள அவர்கள் பலவிதமான முஸ்தீகள், செய்திருக்கக் கூடுமாகையினாலும் வெகு தெதுவாகவும் சாக்கிரதையாகவும் நமதுசேனைகள் முன்னேறியிருக்கின்றன.

5உ சத்துருக்கள் வெகுபலமாய்எதிர்த்துத் தாக்கினார்களெனினும் நமதுபடைகள் அவர்களைத் திருப்பியடித்துவிட்டு ஆப்ஸ்நதிக்கு வடக்கிலும் ஸெல் நதிப் போர்முகத்திலும் பின்வாங்கும்படி செய்வித்துவிட்டன. டெ—நார்டு கால்வாய்க்கும் ஆப்ஸ்நதிக்குமிடையேயுள்ள பிரான்கப்படைகள் எல்லரி ஹாபன் என்ற இடம்வரையில் முன்னேறியிருக்கின்றன. எப்லட்நதியை நமது சேனைகள்கடந்து முன்னேறியிருக்கின்றன. சத்துருக்களிடமிருந்து ஏராளமான தளவாடங்களையும் பீரங்கிகளையும் கிறையாளர்களையும் கைப்பற்றிக்கொண்டோம். லாய்ஸன்நக்கு வடக்கிலுள்ள பீடபூமியில் சண்டை வெகுபலமாய் நடைபெற்றது. எய்சன்நதிக்குவடக்கில் பிலூரி—ஸிலாவ், மான்லை ஆகியஇடங்களைக் கைப்பற்றிக் கொண்டோம்என்று பிரான்சியஅறிக்கை கூறுகிறது.

எய்லட்நதிக்கும் எய்சன்நதிக்கு மிடையேயுள்ள பாகத்தில் க்ளாமவி ப்ரேய் ஆகிய இடங்கள் நமதுவசமாய்விட்டன.

லிஸநதிக்கு வடபாகத்தில் நேற்று நம்நபடைகள் பலமாய்ச்சண்டைசெய்து மெஸினல் என்றஇடத்திற்கு மேற்றுள்ள குன்றைக் கைப்பற்றிக்கொண்டோம். 100 பேர்களைச் சிறைபிடித்து ப்ரோயஸ்ஸுரீட் என்றநிராமத்தையும் நமது வசமாக்கிவிட்டன. விட்ஸேட்பகுதியில் சத்துருக்கள் அடிக்கடிக்கு நமது ஸ்தலங்களை எதிர்த்துத்தாக்கினார்கள். கடந்த நாளுதினங்களில் பிரித்தானியசேனைகள் 400 க்கு அதிமான பீரங்களையும் 16000 கிறையாளரையுஞ் சத்துருக்களிடமிருந்து பிடித்திருக்கிறார்கள் என்று பிரித்தானியஅறிக்கை கூறுகிறது.

7உ ஹாம், சானி ஆகியஇடங்களைக் கைப்பற்றிக்கொண்டோம் என்று பிரான்சிய அறிக்கை கூறுகிறது.

நேற்றையதினம் நமதுபடைகள் 8 மைல்தூரம் முன்னேறியிருக்கின்றன. ஸெனிகாட்டில் ஒருபகுதியை நமதுபடைகள் கைப்பற்றிக்கொண்டன. பெடிட் பரிரிஸ என்ற இடத்தில் சத்துருக்கள் ஏராளமான தனவாடங்களைக் கைவிட்டுவிட்டுப் பின்னடையவே அவற்றை நாங்கள் கைப்பற்றிக்கொண்டோம்.

எய்சன்நதிக்குவடக்கில் பேர்முனை வெகுபழைய அரண்வரிசைகளின்தலையும் நமதுபடைகள் கைப்பற்றிக்கொண்டன.

8உ ஆய்ஸ்நதிக்குவடக்கில் மிஷுரேசன் என்றஇடத்தை நாங்கள் கைப்பற்றிக்கொண்டோம் நமதுபடைகள் செயின்ட் குயின்டன்கால்வாய் வரையில் முன்னேறிச்சென்றிருக்கின்றன.

9உ சோம்நதிக்குதெற்கில் சத்துருக்கள் வெகு கோரமாய்எதிர்த்துப் போராடினார்கள், சண்டை வெகு கடுமையாயிருந்தது. செர்மனியர்களவனைக் என்றநிராமத்தில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொண்டவே சண்டையின் உக்கிரம் வெகுவாய் அதிகரித்துவிடலாயிற்று. நமது படைகள் [illegible] கைப்பற்றிக்கொண்டு [illegible] 100 பேர்களைச் சிறைபிடித்தார்கள்.

7உ பிரோனுக்குக் கிழக்கிலும் வடகிழக்கிலும் நமதுபடைகள் முன்னேறிச்சென்று ஹான்கோர்ட் சோர்ல் லி கிரண்ட் ஆகியஇடங்களைக் கைப்பற்றினோம் ஹாவன்கோர்ட் என்ற இடம் வரையில் முன்னேறியிருக்கின்றன.

9உ நமதுவிமானிகள் சத்துருப்படைக்கூட்டங்களின்மீது வெடிக்குண்டுகளையும் மெஸின்பீரங்கிகளையும் பிரயோகஞ்செய்தார்கள். காம்பிரேய் பகுதியிலும் மற்றஇடங்களிலும் சத்துருவிமானிகள் பெரியகூட்டமாய்வந்து எதிர்த்துப்போராடினர். 23 செர்மன்விமானங்கள் வீழ்த்தப்பட்டும் வேறு 14 விமானங்கள் சேதப்படுத்தப்பட்டுமிருக்கின்றன. 18 பிரித்தானியவிமானங்கள் காணாமற்போயின. 26 டன் வெடிக்குண்டுகளை நமதுவிமானிகள் சத்துருஸ்தலங்களில் போட்டிருக்கின்றனர்.

8உ நேற்று மாலையில் நமதுபடைகள் வில்லேவெக், செயின்ட், ஏயில் ஆகிய இடங்களையும் ஹாவ்ரின்கோர்ட்டுட் என்றநாட்டில் பெரும்பாகத்தையும் கைப்பற்றிக்கொண்டன. அர்மண்டயர்க்கு மேற்கிலுள்ள பகுதியில் சொற்சண்டை நடைபெற்றது. லாபாக்குமேற்கில் நமதுபடைகள் சத்துருஸ்தலங்களில் பிரவேசித்தன.

போர்முனையின் தென்பாகத்தில் கடந்த ஆடிமாதத்தில் செர்மனியர் வலுவில் தாக்க ஆரம்பிக்கும்போது நமதுவசமிருந்த பழைய அரண்வரிசைகளில் நமதுபடைகள் தற்போது நிற்கின்றன. இந்த இடங்களில் சத்துருக்கள் அதிகபலமாய் எதிர்க்கின்றனர். சண்டை வெகு உக்கிரமாய் நடைபெறுகின்றது. சென்ற முதல் தேதியிலிருந்து பிரித்தானிய சேனைகள் 16000 பேர்கள் சத்துருக்களிடமிருந்து கிறைபிடித்திருக்கின்றன என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

9உ போர்முனை முழுவதிலும் செர்மனியர் ஒருபேரழுகியலாத உக்காரத்துடன் பிரங்கிப் பிரயோகஞ்செய்து வருகின்றனர். இதனால் அவர்கள் கடைசிவரையில் எதிர்த்துநின்று போராடத் தீர்மானித்திருக்கின்றார்களென எண்ணவேண்டியிருக்கின்றது. லாவோன் என்ற இடத்திற்குவிரில சத்துருக்கள் வெகு பலமான தற்காப்புகளை ஏற்படுத்திக்கொண் டிருக்கின்றார்கள். எய்லட்நதிக்கு வடக்கில் லாய்ஸன்நிலிருந்து லொரோனுக்கு சிலவும் ரெயில்பாதைக்கெதிர பிரங்கிப்பிரயோகம் வெகு மும்முரமாய் நடைபெறுகின்றது. தற்போது நடைபெறுவதுபோன்ற உக்கிரமான சண்டை இதுவரையில் நடந்து கேயாதென வெகு நாள் அனுபவமுள்ள போர்வீரரும் கூறுகின்றார்கள். ஒவ்வொரு அடி பூமியும் கடுஞ்சண்டைத்தி செய்கைவேண்டி யிருக்கிறதென்று நாளொன்றுக்கு 100 யார்தூரம் முன்னேறுவதும் கஷ்டமான காரியமாய் இருந்திருக்கின்றதென்றால் சண்டையின் உக்கிரம் எவ்வளவு பலமாயிருக்கின்றதென்பது வெளிப்படுகின்றது. கடந்த ஐந்து நாட்களாகப்பெய்ததினால் சண்டை நடைபெற்றது. 6உதாளில் பிரான்சுபடைகள் பீரங்கிப்படைகளின் உதவியைப்பெற்று மி

ண்டன்பர்க் அணிவரிசையில் பிரவேசித்து வெளிவீசோடை ஆகிய இடங்களைக் கைப்பற்றினோர் ண்டனர். இந்த இடங்கள் தற்காலம் கறன் வெட்டியெடுக்கும் இடங்களாகக் காணப்படுகின்றன.

9உ ஆஸ்ஸாலிக்கும் எய்சன்காலிக்கு மிடையேயுள்ளபாதத்தில் க்ரோசாட்டோல்வாய ராமதுபடைகள் கடந்து முன்னேறியிருக்கின்றன. சத்துருக்களின் பீரங்கிப்பிரயோகம் வெகுலமையாயிருந்தது. லாப்பாஸ் பகுதியில் இரவில் செர்மனியர் இருமுறை ரதுதுப்படைகளைப் பலமாய்த் தாக்கினர். சாம்பலின்பகுதியில் ரதுபடைகளைச் சத்துருக்களிடமிருந்து 80 பேரைச்சிறைபிடித்தனர்.

10உ செயிண்ட் கிலின்டிறுக்குக்கிழக்கில் எட்மலர்ன காளபி ஆகியஇடங்களை ரதுபடைகளைக் கைப்பற்றிக்கொண்டன. க்ரோசட் காஸ்வாய்க்கு அப்பாலுள்ள ரொன்ட்சொரோர்ட் மான்ஸ்லரோர்ட் விவ்வரோபல ஆகியஇடங்களைப் பிடித்துவிட்டோம்.

ஆப்ஸாதிக்குவடக்கில் சில ஸ்தலங்களை ரதுபடைகள் கைப்பற்றிக்கொண்டன. ஆப்ஸாதிக்குத்தெற்கில் செர்வேல் என்ற இடத்திலுள்ள தொழிற்சாலை யொன்றைப் பிடித்திருக்கிறோம். எய்சன்காலிக்கும் வெல்லேதிக்கும் இடையேயுள்ளபாதத்தில் கலென்ஸல் என்றஇடத்தருகில் ரதுபடைகள் முன்னேறின என்று பிரதானியறிக்கை கூறுகிறது.

9உ இன்று போர்முனையிலிருந்து கைப்பற்றுக் செய்கிளியிருந்து செர்மனியர் கிண்டர்பேர்க் அணிவரிசையில் பிரித்தானியரால் இன்னும் கைப்பற்றப்படாதபாகங்களை எப்படியாவது விரைந்து கிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் மிகுபோர்புரிந்து நிர்மாணித்திருப்பதாய்த் தெரிகின்றது. இதுவரையில் இல்லாததிதமாய் இருபக்கிலும் பெரிய சண்டைக்குவேண்டிய எற்பாடுகளைத் தயாப்படுத்தியிருக்கின்றன. ஐக்கியதேசங்களின் சேனைப்பலம் அதிகரித்திருப்பதால் இம்முறை செர்மனியர் ஐக்கியபடைகளை எதிர்த்தடுத்துவிடச்செய்யும் முயற்சிகள் பயன்பெறுவென்று பிரான்சு சிபுணர்கள் நம்புகிறார்கள்.

கடந்த ஆவணிமாதத்தில் ஐக்கியதேசவிமானங்கள் 1309 செர்மன்விமானங்களை வீழ்த்திவிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. பிரித்தானியபடைகள் மட்டும் மேற்கூறப்பட்ட 218 விமானங்களை இழந்திருப்பதாயும் ஆஸ்ரேலியா 750 செர்மன்விமானங்களை வீழ்த்திவிருப்பதாயும் தெரிகிறது. கடந்த சிலவாரக்காலமாகச் செர்மனியர் தங்களுடைய விமானச்சேதத்தைக்குறித்து எவ்வித அறிக்கையும் வெளியிடவில்லை.

